**மெதிரிகிரிய பிரதேச சபை**
**பொலன்னறுவ மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 30 ஆந் திகதி சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மெதிரிகிரிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம், மூலதன உதவி வருமானம் மற்றும் கணக்காய்வுக் கட்டண செலவு அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### (ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு நவம்பர் மற்றும் திசெம்பர் ஆகிய 02 மாதங்களுக்கான நீதிமன்ற தண்டப் பண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்வதுடன் தகவல் கிடைக்கப் பெறாமையால் வருமானத்தை இனங்காண்பதற்கு முடியாமல் போனதென அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்கண்டு இருக்கவில்லை. | வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்வதுடன் தகவல் கிடைக்கப் பெறாமையால் வருமானத்தை இனங் காண்பதற்கு முடியாமல் போனதென அறிவிக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டின் போது பிரதேச சபைக்கு கிடைத்திருந்த மூலதன உதவி ரூபா 28,036,524 தொகையினை கணக்கீடு செய்திருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவுகள் சித்தரித்துக் காட்ட வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | சபையினால் இது வரை செயற்படுத்தப் படாத 03 செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 520,000 தொகையினை கடன்கொடுத்தோர் என காட்டப் பட்டிருந்தது. | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் வரை வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 218,291,314 தொகைக்கான 04 சொத்துக்கள் மற்றும் பொறுப்பு விடயங்களை கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதியை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக் கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்கு வதற்கு விண்ணப்பிக்கப் பட்டுள்ளதெனவும் கணிப்பீ டொன்று மேற்கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்படும் எனவும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை இனங்கண்டு பதிவேடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் | | |
| | | ரூபா. | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | | | |
| (i) | பிரிவு 14(1) | - | கேள்வி அழைப்பு மேற்கொள்ளப்படாமல் தனிப்பட்ட கோரிக்கை மீது மற்றும் சபை தீர்மானம் இன்றி 05 கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. | முறைப் பிரகாரம் வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப் பட வேண்டும். | அனைத்துக் கடையறைகளுக்குமாக முறையான கேள்வி அழைப்பு ஒரே தடவையில் மேற் கொள்ளும் குறிக் கோளுடன் இடைக் காலத்திற்காக மாத்திரம் வாடகைக்கு கொடுப்பதற்காக வருமானம் தொடர்பான குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. |
| (ii) | பிரிவுகள் 147 மற்றும் 149 | - | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அநேகமான வியாபார நிலையங்களில் இருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | அனைத்து வியாபார நிலையங்களில் இருந்தும் குறிப் பிட்ட கட்டணம் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரை கிடைக்காத நிலுவை அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதென அறிவிக்கின்றேன். |
| (iii) | பிரிவு 158 | 3,165,828 | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வீதவரி செலுத்தாமை தொடர்பாக போதியளவு எழுத்தாணைகள் வழங்கி இருக்காததுடன் தாமதமாக செலுத்தப்படும் வீதவரிக்காக தண்டப்பணம் அறவீடு | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | | | |
| விதி இலக்கம் 203, 214 மற்றும் 218 - | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடொன்று மேற்கொள் ளப்பட வேண்டியிருந்ததுடன், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடொன்று மேற்கொள்ளப் பட வேண்டும். | தற்போது கணிப்பீடு மேற்கொள்ளப்படு கின்றது. |

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 1994-2019 காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 821,061 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடக் கூடிய பணத்தை தவணைகளாக அறவீடு செய்வதுடன் முடியாத தொகையை பதிவழிப்பதற் காக அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 16 நிர்மாணவேலை கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 1,238,453 தொகை 1 - 2 ஆண்டுகள் வரையான காலம் முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,155,714 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,733,289 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 3,771,160 | 4,367,709 | 2,994,216 | 3,912,668 | 2,946,160 | 3,428,682 | 3,197,660 | 3,343,694 |
| ii. | வாடகை | 13,414,340 | 10,020,521 | 7,965,219 | 262,055 | 5,679,440 | 9,318,247 | 9,318,247 | 261,691 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 458,000 | 349,444 | 282,461 | 60,250 | 495,000 | 244,709 | 244,709 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 13,176,850 | 13,758,053 | 7,202,845 | 12,180,785 | 12,161,650 | 11,815,145 | 2,988,847 | 11,499,465 |
| | மொத்தம் | 30,820,350 | 28,495,727 | 18,444,741 | 16,415,758 | 21,282,250 | 24,806,783 | 15,749,463 | 15,104,850 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 5,546,632 தொகை மாகாண சபையின் பிரதான செயலாளரின் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | வருமானத்தை இனங்காண்பதற்கு மற்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் எழுத்துமூலம் விண்ணப்பித்துள்ளதாக அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் 2020 மே அளவில் இனங்கண்டிருக்காததுடன், முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பான முத்திரைக் கட்டணம் ரூபா 5,166,941 | வருமானம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

தொகை மாகாண சபையில் இருந்து பெற வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.2 எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை கிராமங்களில் இடையே அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திவுலங்கடவல வாராந்த சந்தை ரூபா 2,247,853 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 05 வருட காலம் முதல் இந்த சந்தை விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அக்கரையுள்ள தரப்பினர் முன்வராமையால் வாடகைக்கு கொடுக்க முடியாமல் உள்ளது. |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன் 2017 ஒக்தோபர் 21 திகதி முதல் பதில் கடமை ஆற்றுவதற்காக பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். | நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 04 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவி ஒன்று மற்றும் நூலகர் பதவி ஒன்று வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டது. | தேவைக்கு ஏற்ப பதவியணி மாற்றங்கள் மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 06 வெற்றிடங்களும், 02 மிகையும் காணப்பட்டது. |
| (இ) | இறந்த உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 32,679 தொகை ஊழியர் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிணை விபரங்கள் இன்மையால் அறவிட முடியாமல் உள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 07 சொத்து விடயங்கள் 1-17 ஆண்டுகள் வரையான காலம் முதல் விளைவற்று மற்றும் இயற்கை அழிவுகளுக்கு ஆளாகி காணப்பட்டது. | சொத்துக்கள் பயன்படுத்தல் அல்லது அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 56-5060 கப் வண்டியை தீர்ப்பதற்காக வடமத்திய மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனம் ஒன்றின் உரிமையை உரித்தாக்குவதற்கு முடியாதுள்ளது. | உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வினவிய போது திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பெண் உத்தியோகத்தருக்கு வேறு கடமைகள் சாட்டப்பட்டிருந்த காரணத்தினால் எதிர்பார்த்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்விற்காக தனியாக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். பதவியணி வெற்றிடங்கள் காரணமாக மேற் கொள்ள முடியாது போனது. |